**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**
**<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>**
**<u>முதன்மை சார்பு  நீதிபதி.</u>**
**<u>O.S..No.39/2019</u>**

பெயர் : தமிழரசி (PW1)

க/பெ. : நடேசன்

தேதி : 29.01.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.
3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–

நான் வழக்கின் 1 லிருந்து 4 வரையுள்ள பிரதிவாதிகளின் சகோரரான நடேசனின் மனைவியாவேன். தாவா சொத்தின் விஸ்தீரணம் தோராயமாக எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 8000 சதுரடி இருக்கும். தாவா சொத்து எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி செட்டியாரின் அப்பா நடேச செட்டியார் கிரயமாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். தாவா இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் என்னிடம் இல்லை. எனது மாமனாரின் அப்பா நடேச செட்டியார் கிருஷ்ணமூர்த்தி செட்டியாருக்கு தாவா சொத்தை எழுதிவைத்தாரா என்றால் இல்லை. நடேச செட்டியார் இறந்த பிறகு கிருஷ்ணமூர்த்தி செட்டியார் ஒரு உயில் எழுதிவைத்திருந்தார். அது Expt.B1 என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ளபடி நாங்கள் அனைவரும் தோராயமாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கும்,. 2ம் பிரதிவாதிக்கும் எந்த இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ராஜாவுக்கு முதலிலும், அருமைநாதனுக்கு அதற்கு அடுத்த இடமும், 3ம் பிரதிவாதிக்கு அதற்கு அடுத்தும், அதனை ஒட்டி எனக்கும், அதன் பிறகு 4ம் பிரதிவாதிக்கு அதற்கு அடுத்த இடமும் ஒதுக்கப்பட்டு நாங்கள் அனுபவித்து வருகிறோம்.

எவ்வளவு நாட்களாக அந்த இடத்தில் அனுபவித்து வருகிறோம் என்றால் எனது மாமனார் இறந்து 15 வருடங்களுக்கு மேலாகிறது. அதிலிருந்து அனுபவித்து வருகிறோம். மேற்படி தாவா இடத்திற்காக எனது மாமனாரின் தந்தை நடேசன் செட்டியார் ஒரு உயில் எழுதி வைத்து அதில் 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் அடைவது என்று அந்த உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் கிடையாது. 1ம் பிரதிவாதி அருமை நாதனுக்கு திருமணம் ஆகவில்லை. அவர் தாவா இடத்தில் இருந்து அனுபவித்து இருக்கிறாரா என்றால் அருமை நாதன்

நடுவில் கொஞ்ச நாள் இல்லை. தற்போது அந்த இடத்தில் இருக்கிறார். அவர் துறவரம்பூண்டு சாமியார் போல் வாழ்ந்து வருகிறாரா என்றால் ஆமாம். 4ம் பிரதிவாதி விஜயகுமார் அவர் அனுபவித்து வரும் இடத்தில் 2ம் பிரதிவாதி வேறு நபரை வாடகைக்கு அமர்த்தி அதில் பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் இருக்கலாம்.

4ம் பிரதிவாதி விஜயகுமார் அங்கேயே குடியிருந்துகொண்டு பெட்டிகடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அதேபோல் 3ம் பிரதிவாதி தனசேகரனும் தன்னுடைய இடத்தில் குடியிருந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். எனது கணவர் இறந்த பிறகு நான் எனது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டேன்,. அந்த இடைப்பட்ட காலத்தில் எனது மகனும் இறந்துவிட்டார். அந்த சமயத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட வீட்டின் பின்புறம் உள்ள கொல்லையில் 2ம் பிரதிவாதி ராஜா கடை வைத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு பிரச்சனையாக இருக்கும் நபர்கள் நேரடியாக 1, 2 பிரதிவாதிகள் கிடையாது. ஆனால் எங்களுடைய பாகத்தை பிரித்து கொடுப்பதற்கு அவர்கள் இருவரும் தடையாகத்தான் இருக்கிறார்கள். நான் அந்த இடத்தில் இருப்பதற்கு எனது கணவர் பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது. அந்த வீட்டின் மின் கட்டணம் நான் தான் செலுத்தி வருகிறேன். D1 அருமைநாதனுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வீடும் கடையுமாக உள்ளது. இந்திரஜோதி, மற்றும் ஜோதி இவ்வழக்கின் 5, 6 பிரதிவாதிகள் ஆவார்கள். அவர்களுக்கு சொந்தமான இடத்தை விஜயகுமார் பணம் கொடுத்து கிரயம் பெற்றார் என்ற விபரம் தெரியுமா என்றால் கேள்விப்பட்டேன். தாவா இடத்திற்கு பட்டா யாருடைய பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் எனது மாமனாரின் பெயரில் இருக்கலாம். 2ம் பிரதிவாதி ராஜா அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அதுபோல் இருந்தாலும் மற்றவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயலுகிறாரா என்றால் ஆமாம்.

எனது மாமனார் கிருஷ்ணமூர்த்திக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்கும் வழக்கு நடைபெற்றது. அந்த வழக்கில் எனது மாமனாருக்கு சாதகமாகி 8 பிள்ளைகளுக்கும் என்று தீர்ப்பானது. எனது மாமனார் கிருஷ்ணமூர்த்தி செட்டியார் எழுதி வைத்த உயிலின் படியும், அவரது வாரிகளான 8 பேருக்கும் சமமாக வேண்டும் என நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். இந்திரஜோதி மற்றும் ஜோதி ஆகியோர்கள் 4ம்

பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக நான் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் தாவா சொத்தினை நாங்கள் தான் நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறோம் என்றாலும் அந்த அனுபவத்தின் காரணமாக எங்களுக்கு சொந்தம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தாவா சொத்தில் நானும்,. மற்றும் பிற பிரதிவாதிகளும் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் குடியிருந்து அனுபவத்து வருகிறோம். ஆதலால் அந்த தாவா சொத்து எனக்கும், 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் உரிமை உடையது. ஆதலால் தாவா சொத்தில் எனக்கு 1/8 பாகம் பிரித்து கொடுக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.